செ.வெ.எண்.36 நாள்: 20.01.2021

**தூத்துக்குடி மாவட்டம் செபத்தையாபுரத்தில் ரூ.25 லட்சம் மதிப்பில் விரிவாக்கம் மற்றும் நவினமயமாக்கப்பட்ட, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டிடம் மற்றும் பெருங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் ரூ.19 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நெல் கிட்டங்கி ஆகிய கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். மேலும் சிவத்தையாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் 95 நபர்களுக்கு ரூ.80 லட்சம் மதிப்பிலான கடன் உதவிகள் வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் செபத்தையாபுரத்தில் ரூ.25 லட்சம் மதிப்பில் விரிவாக்கம் மற்றும் நவினமயமாக்கப்பட்ட, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டிடம் திறப்பு நிகழ்ச்சி மற்றும் பெருங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் ரூ.19 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நெல் கிட்டங்கி திறப்பு நிகழ்ச்சி மற்றும் செபத்தையாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் 95 நபர்களுக்கு ரூ.80 லட்சம் மதிப்பில் கடன் உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.01.2021) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.சண்முகநாதன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டம் செபத்தையாபுரத்தில் 140 ஆண்டுகள் பழமையான தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் இங்கு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதற்கு காரணம் அப்பகுதியில் மிக சிறப்பாக செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவி குழுவில் பெண்கள் அனைவரும் வாங்குகின்ற கடனை உரிய முறையில் காலம் தாழ்த்தாமல் செலுத்துவதுதான். எனவே இதன் மூலம் வங்கிகளுக்கு இழப்பிடு ஏற்படாமல் லாபத்தில் இயங்கி வருகிறது. இப்பகுதியில் 3 போகம் சிறப்பாக விவசாயம்தான் செய்து வருகிறார்கள். கடந்த ஜனவரி மாதம் தொடர் மழையின் காரணமாக தாமிரபரணி நதியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு இப்பகுதியில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி விவசாயிகளுக்கு பல்வேறு சேதாரங்களை ஏற்படுத்தி உள்ளது. தண்ணீர் வடிந்த பிறகு அந்த நெற்பயிர் சேதாரம் குறித்த மதிப்பீடுகளை வருவாய் துறையினர், வேளாண்மை துறையினர் இணைந்து மதிப்பீடு செய்து வருகிறார்கள்.

செபத்தையாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கிளை நவீன முறையில் கணிணிமயமாக்கப்பட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் பெருங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் ரூ.19 லட்சம் மதிப்பில் விவசாயிகள் தங்கள் விளைவித்த நெல்லை இங்கு வைத்து கடன் பெறும் வகையில் 100 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட நெல் கிட்டங்கி திறந்து வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்கள் இப்பகுதியில் தற்பொழுது நல்ல நிலையில் இயங்கி வந்து கொண்டு இருக்கிறது. முந்தைய காலத்தில் நலிவுற்று கூட்டுறவு சங்கங்கள் நஷ்டத்தில் இயங்கி வந்தது. தற்போது சிறப்பான நிர்வாகத்தால் ரூ.5 கோடி வரை கடன் வழங்கும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. இப்பகுதியில் தமிழக அரசின் சார்பில் பல்வேறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது தமிழகம் முழுவதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2000 அம்மா மினி கிளினிக் அறிவிக்கப்பட்டு முதல்கட்டமாக 628 அம்மா மினி கிளினிக்குகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தங்கள் பகுதியில் மினி கிளினிக் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வெகு தொலைவில் மருத்துவமனைக்கு செல்லாமல் இங்கு சிகிச்சை பெற்று கொள்ளலாம். இதுபோன்று பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். எனவே பொதுமக்கள் அனைவரும் அத்திட்டத்தினை முழுமையாக பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.சுதாகர், பெருங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சங்க தலைவர் திருமதி.ஆஷா சண்முகநாதன், தூத்துக்குடி மண்டல துணை பதிவாளர் திரு.சுப்புராஜ், கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் திரு.அந்தோணி, செபத்தையாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சங்க தலைவர் திருமதி.பி.வேல்கனி, துணைத்தலைவர் திரு.சரவணகுமார் ராஜூ, ஆடிட்டர் திரு.சுயம்புராஜ், முக்கிய பிரமுகர்கள் திரு.திருப்பாற்கடல், திரு.காசிராஜன், திரு.அழகேசன், திரு.ராஜ்நாராயணன், திரு.துரைச்சாமிராஜ், திரு.பரமசிவன், திரு.பாலசுப்பிரமணியன், திரு.இசக்கிராஜ், திரு.சந்திரப்பால் மற்றும் கூட்டுறவு வங்கி செயலாளர் மற்றும் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.